செய்தி வெளியீடு எண் : 1455 நாள்:30.12.2021

**<u>செய்தி வெளியீடு</u>**

**<u>தமிழ்நாடு மாநில ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆணையம் சென்னை தேனாம்பேட்டையில் உள்ள தாட்கோ தலைமை அலுவலகத்தில் செயல்படும்.</u>**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் சமூகப் பொருளாதார மற்றும் கல்வி வளர்ச்சிக்காக தமிழ்நாடு அரசு பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், மாநில அளவில் ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர்கள் ஆகியோருடைய சட்டபூர்வமான உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களுடைய முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், 'தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆணையம்' என்கிற புதிய அமைப்பு ஒன்றைத் தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்படும் வகையில் உருவாக்கிட உரிய சட்டம் இயற்றப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, 'தமிழ்நாடு மாநில ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆணையம், தற்போது எண்.31, செனடாப் சாலை, 2வது சந்து, தேனாம்பேட்டையில் உள்ள "தாட்கோ" தலைமை அலுவலக கட்டடத்தில் செயல்படும்.' இந்த அலுவலகத்தில் ஆணையத்தின் தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர் செயலர் ஆகியோர் செயல்படுவார்கள். அவர்களது அலுவலக தொலைபேசி எண்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரி கீழே கொடுக்கப்பட்டுள்ளன

| வ. எண். | பெயர் | பதவி | தொலைபேசி எண். | மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|---|---|
| 1. | மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மேனாள் நீதியரசர் திரு.பெ. ரா. சிவகுமார் | தலைவர் | 24340051<br>24340052 | chair.tnscstcommission@gmail.com |
| 2. | திரு. ம. புனிதப் பாண்டியன் | துணைத் தலைவர் | 24340054 | vicechair.tnscstcommission@gmail.com |
| 3. | வழக்கறிஞர் திரு. சு. குமாரதேவன் | உறுப்பினர் | 24340058 | member1.tnscstcommission@gmail.com |
| 4. | திருமதி. K. M. லீலாவதி தனராஜ் | உறுப்பினர் | 24340061 | member2.tnscstcommission@gmail.com |
| 5. | வழக்கறிஞர் திரு. பொ. இளஞ்செழியன் | உறுப்பினர் | 24340062 | member3.tnscstcommission@gmail.com |
| 6. | முனைவர் கே. ரகுபதி | உறுப்பினர் | 24340063 | member4.tnscstcommission@gmail.com |
| 7. | திரு. கே. விவேகானந்தன், இ.ஆ.ப., | உறுப்பினர் செயலர் | 24340059 | ms.tnscstcommission@gmail.com |

மேலும், இந்த ஆணையத்திற்கான பொதுவான மின்னஞ்சல் tnscstcommission@gmail.com என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**